**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 32/2014**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 02.02.2026 |
| **பெயர்** | **பெருமாள்** |
| **த/பெ** | **தர்மலிங்கம்** |
| **சாட்சி** | **PW3** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 02.51.p.m**

**குறுக்கு விசாரணை–**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமானவாக்குமூலத்தை யார் கூறி யார் எழுதியது என்றால் நான் கூறி என் வழக்கறிஞர் எழுதினார். இந்த வழக்கை யார், யார் மீது தாக்கல் செய்துள்ளது என்றால் பழநியும், கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் 8 செண்ட் நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எனக்கு விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. அதன் சர்வே எண் 256. எத்தனை வருடத்திற்கு முன்பு விற்பனை செய்தேன் என்றால் 1965 ல் விற்பனை செய்துவிட்டேன்.

2. தற்போது என் பெயரில் ஏதேனும் விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது, அது கரம்பாக உள்ளது. அதற்கான பத்திரம் ஏதேனும் என்னிடத்தில் உள்ளதா என்றால் பத்திரம் எதுவும் இலலை எனக்கு கூலி ஜீவனம் என்றால் ஆம். விவசாய கூலி தான். யார் வேலைக்கு அழைத்தாலும் செல்வேன் என்றால் சென்று கொண்டிருந்தேன் தற்போது வீட்டில் தான் உள்ளேன். வழக்கு சொத்து உள்ள அலமாதி கிராமத்திற்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு சென்று பார்த்தேன் என்றால் தோராயாமாக 40 வருடங்களுக்கு முன்பு சென்று பார்த்தேன். வழக்கு சொத்து ஆரம்பத்தில் யாருக்கு சொந்தமானது என்றால் சுவாமிநாதன் என்பவருக்கு சொந்தமானது. சுவாமிநாதன் கிரையம் பெற்ற சொத்தா

என்றால் சுவாமிநாதனுக்கு பூர்வீகமான சொத்து.

3. சுவாமிநாதன் பெயரில் உள்ள பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. பொதுவாக விவாசய நிலத்தில் பயிர் செய்யும் போது கிராம நிர்வாக அலுவலர் என்ன பயிர் செய்து வருகிறோம் என்ற விவரத்தை குறித்து கொண்டு வருவார்கள் என்றால் சரிதான். எனவே அந்த பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் யார் பயிர் செய்து வந்தார்கள் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். வழக்கு எத்தனை வருடங்களாக நடந்து வருகிறது என்றால் 12 வருடங்கள்.

4. யார் என்னை சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அழைத்தார்கள் என்றால் பழநி அழைத்தார். எதற்காக என்னை அழைத்தார் என்றால் பக்கத்து நிலத்துக்காரர் என்ற வகையில் அழைத்தார். பழநி நிலத்தில் எந்த பக்கத்தில் என்னிலம் உள்ளது என்றால் திருவள்ளூர் சாலை அருகில் உள்ளது. சாட்சி தற்போது வடக்கில் ரோடு, ரோட்டிற்கு அருகில் கால்வாய், அதற்கு அருகில் தான் 40 செண்ட் நிலம் உள்ளது. 40 வருடங்களுக்கு முன்பாக சொத்தினை யார் அனுபவித்து வந்தார்கள் என்ற விவரத்தினை தான் கூறுகிறேன் என்றால் சரிதான். நான் கூறும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல

**விசாரணை முடியும் நேரம். 03.00.p.m.**